www.padippakam.com



# புதிய கண்ணோட்டம்

Registered as a Newspaper at the G.P.O (QD / 79 / News / 94)

வெளியீடு: 4 | 01 தை 1994 | விலை: ரூபா ஐந்து

# 3 இலட்சம் பேரை அகதிகளாக்கிய வெள்ளப் பெருக்கு

## யுத்த சோகங்களுக்கு மத்தியில் இயற்கை அனர்த்தம்

**முடிவற்ற யுத்தமும், பொருளாதாரத் தடையும் வடக்கு கிழக்கு வாழ் மக்களை மரணத்தை நோக்கியும் பட்டினியை நோக்கியும் தள்ளிக் கொண்டிருக்கும் வேளையில், இயற்கையின் கோரத் தாண்டவம், சுமார் 80 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மூன்று இலட்சம்பேரை அகதிகளாக்கியுள்ளது.**



மட்டக்களப்புப்பகுதியில் பல்லாயிரக் கணக்கான வீடுகள் வெள்ளத்தால் சேதமடைந்தன. 32 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாயின. இப்பகுதியில் 1978,82ம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவு இதுவாகும்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் 7 குளங்கள் உடைப்பெடுத்தன. பல இடங்களில் குளங்கள் வான்பாய்கின்றன. சில கிராமங்களுக்கிடையே இரண்டு மூன்று நாட்களுக்கு தொடர்புகளே அற்றுப் போயின. இங்கு சுமார் 2000 குடும்பங்களும், மன்னாரில் 1500 குடும்பங்களும் அகதிகளாயின. வடக்கு கிழக்கு பூராவுமே பல கோடி ரூபா பெறுமதியான நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் நாசமாகி உள்ளன.

யாழ்ப்பாணத்தில் 18ஆயிரம் குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 13ஆயிரம் குடும்பங்களும் அகதிகளாகியுள்ளன. மேலும் இப் பகுதியில் 3 பெரிய குளங்கள் உட்பட 30 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன பலகோடி ரூபா பெறுமதியான நெல், கால்நடைகள், உபஉணவுப் பயிர்கள் அழிந்துள்ளன.

கிளிநொச்சி இரணைமடுக்குளமும், மன்னார் கட்டுக்கரைக்குளமும் நீர்மட்டம் அபாயகரமான அளவிற்கு ஏறியது. அகதிகளான மக்கள் தேவாலயங்கள், பாட சாலைகள், அரச கட்டிடங்கள் எனத் தஞ்சமடைந்துள்ளனர்.

ஆனால், இவர்களுக்கு அடிப்படை வசதியினைச் செய்து கொடுப்பதில் அரசு மந்த கதியிலேயே செயற்பட்டது. மூன்று நாட்களுக்கு உணவு வழங்குவதைத் தவிர, சமூக சேவைத் திணைக்களம் வேறெதையும் செய்யவில்லை. இந்த மூன்று நாட்களுக்கும் ஒவ்வொருவருக்கும் 36 ரூபா பெறுமதியான உணவே வழங்கப்பட்டது.

வீடுவீசல்களை இழந்தவர்களுக்கு, பாரிய பயிர்ச் சேதாரங்களைச் சந்தித்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி அரசு தொடர்ச்சியாக மௌனம் சாதித்து வருகிறது.

ஆனால், அவர்கள் தஞ்சமடைந்த இடங்களிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைதான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொற்று நோய் அபாயங்கள் அதிகரித்துள்ளன. இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும். மேற்கொள்ளப்படவில்லை.

சில சமூக சேவை ஸ்தாபனங்களும், அரசியல் இயக்கங்களும் தம்மாலான சில உதவிகளைச் செய்ய முற்பட்டாலும், அவையெல்லாம் வெள்ளத்தில் அகதிகளானவர்களின் அந்தப் பாரிய தொகையை ஈடுகொடுக்க முடியவில்லை. வன்னி, மட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி. பிரதமர், சமூக சேவைத் திணைக்களம் எனத் தொடர்ச்சியாக வலியுறுத்தியும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காயின.

தூங்கி வழியும் சமூக சேவைத் திணைக்களமோ கஜானாவில் பணமில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிவருகிறது. உதாரணமாக, வவுனியாப் பகுதி நிவாரணப் பணிக்கென 55 இலட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டிருந்தும் இரண்டரை லட்சம் ரூபாவே வழங்கப்பட்டது. மட்டக்களப்பு, மன்னாரிலும் இதே நிலைதான்.

உடமை இழப்பு, நோய், பயிர் நட்டம், அகதி வாழ்க்கை என்ற கோரச் சுவடுகளை இந்த வெள்ளம் பதித்துச் சென்றுள்ளது.

வெலிஓயா திட்டமிட்ட சிங்களக் குடியேற்றப் பகுதியில் பாதிக்கப்பட்ட 241 சிங்களக் குடும்பங்களுக்கு வீடுகளைப் புனரமைப்பதற்கென 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லோரும் மனிதர்களே என்ற அடிப்படையில் உதவிகள் வழங்கப்படுவதை நாம் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால் இங்கு பாரபட்சங்கள் தொடர்கின்றன. அரசு ஒரு கண்ணில் வெண்ணெய்யும் மறு கண்ணில் சுண்ணாம்பும் என்றவாறு நடந்துகொள்கிறது.

தமிழ் மக்கள் எந்தவிதத்தில் துன்பங்களை அனுபவித்தாலும் அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன், எக்கேடு கெட்டொழிந்தாலென்ன என்ற மனப்பான்மையுடனேயே நடத்தப்படுகிறார்கள்.




www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



## பெருகிவரும் அதிருப்தி

அரசின் ஜனநாயக விரோதப் போக்குகள் அதிகரித்துச் செல்லும் வேளையில் ஜனநாயக மனித உரிமைச் சக்திகள், எதிர்க்கட்சி அரசியல் அணிகள் அரசின் இப்போக்குகளுக்கெதிராக குரல் கொடுத்து வருகின்றன.

இன்று முதன்மையானதும் முக்கியமானதுமான பிரச்சினை, வடக்கு கிழக்கில் அரசு பிடிவாதமாக நடத்திவரும் யுத்தமே. இந்த யுத்தத்திற்கெதிராக சர்வதேச மனித உரிமை தினத்தில் பெண்களமைப்புக்களும், மனித உரிமை அமைப்புக்களும் யுத்தத்திற்கெதிரான கோஷங்களை எழுப்பின. யுத்த முனையில் சிங்கள இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் கொல்லப்படுவதற்கு எதிராக இவர்கள் குரல் கொடுத்தார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, இத்தகைய ஒரு இயக்கம் தெற்கில் ஆரம்பித்திருப்பது சற்று ஆறுதலான விஷயம்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவி சிறீமாவோ பண்டாரநாயகா அவர்கள் நுகேகொடையில் நடைபெற்ற வெகுஜன ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றும்போது, யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் எதையும் இவர்கள் முன்வைக்கவில்லை என்பது பலத்த சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புவதாக அமைந்தாலும், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் அரசியல்தீர்வு காணப்படவேண்டும் என்று கூறியமை வரவேற்கப்பட வேண்டியதே.

அடுத்த விடயம், அரசினதும் ஏனைய பேரினவாத நிறுவனங்களதும் இனவெறிப் பிரச்சாரங்கள், மற்றும் நடவடிக்கைகளுக்கெதிராக இ.தொ.கா., அரசை எதிர்த்துக் குரல் கொடுப்பதும், மலையக மக்களின் வேலைநிறுத்தப் போராட்டமும் பெருகிவரும் அதிருப்தியைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இந்த அரசியல் நிகழ்வுகள் எவையும் தற்செயலானவை அல்ல. அரசின்மீது மக்களுக்குள்ள அதிருப்தியின் பிரதிபலிப்பாகவே இத்தகைய நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

யுத்தம், கைது, சித்திரவதை, ஆட்கடத்தல், அகதிவாழ்க்கை என நாடு கெட்டுக் குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறது. அவசரகாலச் சட்டம் ஒரு நிரந்தர சட்டமென்று ஆகிவிட்டது.

விலைவாசி என்ற பூதம் கட்டுப்படுத்த முடியாதளவில் தலைவிரித்தாடுகிறது. மக்கள் பொருளாதாரப் படுகுழியிலிருந்து தப்ப முடியாது தத்தளிக்கிறார்கள்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளே இது விடயத்தில் அதிருப்தி கொண்டுள்ளன. இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதன் அவசியம் பற்றி பல நாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

அரசுக்கு உள்ளேயும் வெளியேயும், வெளிநாடுகளிலும் இருந்து நெருக்கடிகள் உருவாகியிருக்கும் வேளையில், ஜனநாயகம், மனித உரிமைகளுக்காகச் செயற்படும் சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

குறுகிய தேர்தல் நோக்கங்களுக்காக உண்மையான கோஷங்களை வைத்துவிட்டு, பின்னர் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக விடயங்கள் மாறிவிடக் கூடாது என்பதே எங்கள் கரிசனை ஆகும்.

# "யாழ்.பல்கலைக்கழக அனுமதி குறைப்பினால் மாணவர்களை விரக்தி நிலைக்குத் தள்ள வேண்டாம்"



### பாராளுமன்றத்தில் தோழர் இராஜ குகனேஸ்வரன்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக மாணவ மாணவியர் உட்பட பொதுமக்களும் முகம் கொடுக்க வேண்டிய இடர்பாடுகள் ஏராளமாக உள்ளன.

மின்சாரத்தடை, மண்ணெண்ணெய் கிடைப்பதில் தடங்கல்கள், அப்படிக் கிடைத்தாலும் அதிகரித்த விலை, இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் உள்ள பாடசாலைகளில் அவ்வப்போது நடைபெறும் மூடுவிழாக்கள், பாதுகாப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மாணவ மாணவியரால் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி, போதிய ஆசிரியர்கள் இல்லாமை, கற்பித்தல் உபகரணங்கள் இல்லாமை, போக்குவரத்து வசதிகள் பாதிக்கப்பட்டமை, வன்செயல்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள்...

இவை எல்லாம் சேர்ந்து மாணவர்களுக்கு ஏற்படுத்தியுள்ள உளரீதியான பாதிப்புக்கள்...

இப்படி எத்தனையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்கள் தமது படிப்பை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இத்தகைய பிரச்சினைகளால் இம்மாணவர்கள் பரீட்சைகளில் திருப்தியாகச் செய்யக்கூடிய நிலைமை இல்லாமல் இருப்பதை இந்நாட்டில் உள்ள எவரும் அறிவர்.

இதற்கு முந்திய காலங்களில் நிலைமை சுமுகமாக இருந்தபோது, வடக்கு கிழக்கு மாணவர்களின் பெறுபேறுகள் மிகமிகத் திருப்திகரமாக இருந்தன. அதன் காரணமாகத் தரப்படுத்தல் முறை புகுத்தப்பட்டதும் இங்கு நினைவு கூரத்தக்கது.

எனவே, வடக்கு கிழக்கு மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி தொடர்பான கொள்கையை மீளாய்வு செய்து யதார்த்த அடிப்படையில், அர்த்தமுள்ள ஒரு புதிய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்விடயத்தில் யாழபல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பயனுள்ள ஒரு ஆலோசனையைக் கூறியுள்ளது. பல்கலைக்கழக அனுமதியின்போது, கடந்த ஐந்து வருடங்களில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சராசரி எண்ணிக்கைக்குச் சமமான அளவு எண்ணிக்கையிலான மாணவர்களை பல்கலைக்கழகங்களில் சேர்க்க வேண்டும் என அச்சங்கம் கூறியுள்ள ஆலோசனை வரவேற்கத்தக்கது.

தீர்க்கதரிசனமற்ற முடிவுகளால் மாணவர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளி, விபரீதமான நடவடிக்கைகளில் அவர்கள் இறங்குவதற்கு வழி வகுக்கக் கூடாது.

கடந்த காலங்களில், இவ்வாறான நடவடிக்கைகளால் யாழ். மாணவர் மத்தியில் அமைதியின்மை தோன்றி, அது வேறுவிதமான திருப்பத்தை அடைந்ததை நாம் அறிவோம். தரப்படுத்தல் என்ற நடைமுறை ஏற்படுத்திய விபரீத விளைவுகளை மறந்துவிடக் கூடாது.

இவ்விடயத்தில், மனிதாபிமான அடிப்படையில் சிந்தித்து, மாணவர்களைப் பாதிக்காத வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கான கொள்கையை வகுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னுமொரு முக்கியமான விடயம், வவுனியாவிலுள்ள வடமாகாணத்துக்குரிய இணைப்புப் பல்கலைக்கழகக் கல்லூரி பற்றியதாகும். இக்கல்லூரி தற்போது ஒரு தனியார் வீட்டில் இயங்கி வருகிறது. இவ்வீட்டில் போதுமான இடவசதி இல்லை. விடுதி வசதிகள் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் முதலிய மாவட்டங்களிலிருந்து இக்கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கு விடுதி வசதிகள் மிகவும் அத்தியாவசியமானது. வவுனியாவில், தனியார் வீடுகளில் தங்குமிட வசதி பெறுவதில், இம்மாணவர்கள் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதுமட்டுமல்ல, இடவசதியின்மை காரணமாக இக் கல்லூரியில் மேலதிக கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாமலும் இருக்கிறது.

வடபகுதியில் உள்ள மாணவர்களுக்கு, பல்கலைக்கழகத்துக்கு அடுத்தபடியாக இக் கல்லூரி ஒன்றே மேற்படிப்புக்கான ஒரே நிறுவனம் ஆகும். எனவே, இப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கு விடுதி வசதிகளுடனான புதிய கட்டிடம் அமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை வழங்க கல்வி, உயர் கல்வி அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கடிதங்கள்

அமைச்சரவை முடிவுப்படி, மலையக மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு இனத்தை தனியாகப் பிரித்துக் காட்டும் செயலாகும். தென்னாபிரிக்காவில் முன்பு இதுபோன்ற ஒரு முறை அமுலில் இருந்தது.

விசேட அடையாள அட்டை வழங்கப்படுவதன் நோக்கம் மலையக மக்களுக்குக் கொடுத்த வாக்குரிமையைப் பறிப்பதாகவே அமையும். வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்தால்கூட, விசேட அடையாள அட்டை வைத்திருப்பவர்கள் வாக்களிக்க முடியாத நிலையே உருவாகும்.

இது ஒருபுறமிருக்க, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரான ராஜா செனவிரட்ன, பத்திரிகையாளர் விருந்தொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்: "சிறுபான்மையினர், பெரும்பான்மையினருக்கு பயமுறுத்தல்காரர்களாக இருக்கக்கூடாது, பெரும்பான்மையினரின் நலன்களுக்குக் குந்தகம் விளைவிப்பவர்களாக இருக்கக் கூடாது, பெரும்பான்மையினரைச் சீண்டி விடுபவர்களாகவும் இருக்கக் கூடாது."

இவரின் கூற்றுப்படி, மலையக மக்கள் ஒன்றும் கேட்கக் கூடாது என்பதே அர்த்தமாகும். தமிழ்த் தொழிலாளர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட, இந்தத் தொழிற்சங்கத்தின் கொள்கைகூட பேரினவாதத்திற்கு முண்டு கொடுக்கும் வகையில்தான் உள்ளது.

– குறிஞ்சி ஊரான், தலவாக்கலை.

....சரிநிகர்க்காரர்கள் சுற்றி வளைத்து நியாயப்படுத்தி வரும் புலிகளின் போராட்டத்தாலோ, அல்லது அவர்கள் எழுதி அடுக்கும் ஜேணலிச வாய்ப் பந்தல்களினாலோ தமிழ் மக்களுக்குக் கிடைத்த Benefit என்ன?

தொட்டதுக்கெல்லாம் பிழை பிடித்து நொட்டை சொல்லிக் கொண்டிருப்பது என்பது ஒருவகை நோய். அதையெல்லாம் மாற்ற மருந்து கிடையாது. நீங்கள் எழுதிக் கொண்டிருப்பதெல்லாம் கூட வியர்த்தம்தான். இயக்கங்கள் எல்லாவற்றையும் கொச்சைப்படுத்திவிட வேண்டுமென்று அலைந்து கொண்டிருப்பவர்களுக்கு, அதன்மூலம் பத்திரிகை விற்பனைக்காகப் பரபரப்புத் தேடுபவர்களுக்கு – அவர்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பளித்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்றைய நிலையில், இத்தகையோரை அம்பலப்படுத்துவதற்கும், தமிழ் மக்கள் பிரச்சினைக்கான தீர்வுக்கும் சம்பந்தமெதுவுமில்லை....

– இராஜகுலசிங்கம்,
சூசைப்பிள்ளையார்குளம், வவுனியா.

இற்றைக்குப் பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு த.வி.கூட்டணிப் பேச்சாளர்கள், சிங்கள அரசாங்கத்தின் பாரபட்ச நடவடிக்கைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லி, "அவர்கள்வேறு நாம் வேறு. ஏனெனில், அவர்கள் சிங்களவர்களாம் நாங்கள் தமிழர்களாம்" என்று பேசுவார்கள்.

இத்தனை வருடங்கள் கழித்து இப்போது, ஐ.தே.க. மாநாட்டில் இந்த நாட்டின் ஜனாதிபதி இவ்வாறு பேசியிருக்கிறார்: "இலங்கையில் வளமற்ற பகுதியே வடக்கு. அங்கு தேயிலை இல்லை. றப்பர் இல்லை. இரத்தினக்கல் இல்லை. ஆறுகள் இல்லை. என்றாலும் அங்கு வாழ்ந்தவர்களுக்கு நாம் சகல வசதிகளையும்அளித்தோம். மின்சாரம் கொடுத்தோம். பல்கலைக்கழகம் கொடுத்தோம். ஆஸ்பத்திரி கொடுத்தோம்."

சரி, கொடுத்தவர்கள் யார்? வாங்கிக் கொண்டவர்கள் யார்? நாங்கள் வேறு

3ம் பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரு ஏமாற்று நாடகம்

ஜனவரி 05 இலிருந்து 12ந் திகதி வரை மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியாவில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என நாடு முழுவதும் குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் வேளையில், உலகுக்கும் கடன் வாங்கும் நாடுகளுக்கும், ஒரு ஜனநாயகச் சூழலை உருவாக்க முயற்சிப்பதாகவும், வடக்கு கிழக்கில் சுமுக சூழ்நிலையை உருவாக்க முயலுவதாகவும் நாடகமாடிக் காட்ட அரசு முயலுகிறது.

பல கோடி ரூபா செலவு செய்து ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்கான பேரங்களை நடத்த, அரசின் இராஜதந்திரத் தூதுவர்கள் நாலா திசையிலும் பறந்து கொண்டிருக்கும்போது இங்கு இந்தப் போலி நாடகத்தை அரங்கேற்ற முயலுகிறார்கள்.

நாட்டில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல, பயங்கரவாதப் பிரச்சினைதான் என்று ஜனாதிபதி விஜயதுங்கா அவர்கள் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். கிழக்கைப் பிரித்துவிட்டால் பயங்கரவாதப் பிரச்சினை ஒரு சிறு புண்ணாகி விடும் என்று பேசியுள்ளார். அவருடைய கண்ணோட்டத்தில், சிறு புண்ணாக்கும் முயற்சியில் முதல் நடவடிக்கை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்.

ஆனால், இங்கு ஒன்று மறக்கப்பட்டு விட்டது. கடந்த பதினைந்து வருடங்களில் புரையோடிப்போன புண்ணாக மாறிவிட்ட ஆறாத ரணமான தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை. அதுபற்றி பேரினவாதிகள் எவரும் வாய்திறக்கவே அஞ்சுகிறார்கள். எல்லாவற்றையும் பயங்கரவாதம் என்ற கோணியில் போட்டு, கடலில் எறிந்து விடலாம் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், சர்வ வியாபகம் பெற்ற– உலகளாவிய அளவில் விளங்கிக் கொள்ளப்பட்ட ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினையை எந்தக் கோணியிலும் அடைத்துவிட முடியாது.

எச்சில் கையால் காகம் துரத்தாத உலோபியைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்றளவிற்குக் கொச்சைப்படுத்தும் பேரினவாத ஆட்சியாளர்களும் இந்த உலோபியைப் போன்றவர்கள்தான்.

அடிப்படையான பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், எதைப் போட்டாலும் தமிழர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்ற பாணியிலான அரசின் செயற்பாட்டுக்கெதிராக அனைத்துத் தமிழர் இயக்கங்களும் அணிதிரள வேண்டும். நாமொன்றும் இளித்தவாயர்கள் அல்ல என்பதை தமிழர் இயக்கங்கள் அரசிற்கு உணர்த்தியாக வேண்டும்.

---

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணத் தவறிய அரசாங்கம், இவ் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதன் மூலமாக கிழக்கிலும், வவுனியாவிலும் சகஜநிலை ஏற்படுத்தப்பட்டுவிட்டதென்று உலகுக்கு காட்டுவதற்கு நோக்கம் கொண்டு செயற்படுகின்றது என்றே நாம் அபிப்பிராயப்படுகின்றோம்.

எவ்வாறெனினும், உள்நாட்டுப் போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளின் கீழ் நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடத்த முடியாது என்பது தெட்டத் தெளிவானது. இப்பகுதிகளில் பெரும்பாலானவற்றில் சிவில் நிருவாகம் இன்னமும் மீள நிலைநாட்டப்படவில்லை. சட்டம் ஒழுங்கு நிலையும் உகந்ததாக இல்லை. அகதிகளாக எங்கெங்கோ வாழும் வாக்காளர்கள் சொந்தப் பகுதிகளுக்கு திரும்பவில்லை. நிருவாகம் இராணுவத்தின் கைகளிலேயே இருக்கிறது. வாக்காளர் இடாப்புகளும் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை.



எம்மைப் போன்று எமது மக்களின் அபிலாசைகளைத் திருப்தி செய்யக் கூடிய அரசியல் தீர்வொன்றுக்காக தங்களை அர்ப்பணித்த எந்தவொரு அரசியல் கட்சியினருமே இத்தேர்தல்களில் பங்கேற்க இயலாது. அரசியல்தீர்வொன்றுதான் இப்பகுதிகளில் வழமை நிலையையும், அமைதி சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் கொண்டுவர முடியும். போலியான உள்ளூராட்சித் தேர்தல், அரசியல் தீர்வுக்கு ஈடானதாக இருக்க முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் உத்தேச உள்ளூராட்சித் தேர்தல்களை முற்றுமுழுதாக ஒரு கேலிக்கூத்தாகவும், தேர்தல் நடவடிக்கைகளை சிரிப்புக்கிடமானவையாக்குவதாகவுமே அமையும்.

– மு. சிவசிதம்பரம்
(தலைவர், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி)

---



1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின் இடம்பெற்ற வன்செயல்களினால் கிழக்குமாகாணத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் தமது மாகாணத்தை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். 1989ஆம் ஆண்டுக்குப் பின் கிழக்கு மாகாணத்தில் வாக்காளர் இடாப்பு பதியப்படவில்லை.

இதேவேளை, சட்டரீதியற்ற வகையில் அண்மையில் குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகளின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை. புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல் தொடர்கிறது. கடந்த மாதம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு, பாதுகாப்பு கருதி மட்டக்களப்பு நகர் தவிர்ந்த ஏனைய இடங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை.

மேலும், அரசாங்க அமைச்சர்கள், எம்.பி.க்கள் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சி பிரதிநிதிகள் 1990 ஆம் ஆண்டுக்குப் பின் அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட சந்தர்ப்பம் கிட்டவில்லை.

இதுதவிர, கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்கள் அகதிகளாக பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். எனவே, கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்தக் கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை.

– த. சித்தார்த்தன்
(தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்)

---

## கடிதங்கள் ...

அவர்கள் வேறு என்று சொல்வதானால், எதற்கு அநியாய யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்? இந்த நாட்டு வளங்களிலிருந்து இன்னொரு நாட்டுக்கு உதவி செய்து கொண்டிருப்பது சிரமம்தானென்றால் எல்லாவற்றையும் நிறுத்திவிடலாமே!

– த. லோகநாதன்,
வீரமுனை, சம்மாந்துறை.

1988 ஏப்ரல் மாதத்திலிருந்து இடையிடையே நின்று வெளிவந்து கொண்டிருக்கும் தங்கள் புதியகண்ணோட்டம் இதழைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். எனது அபிப்பிராயங்களைக் கடிதங்கள் வாயிலாக உங்களுக்குத் தெரியப்படுத்தியும் வந்திருக்கிறேன். 17 இதழ்கள்வரை வந்தபின் மீண்டும் ஒன்றிலிருந்து ஆரம்பித்திருப்பது ஏன் என்று கேட்டதற்குத் தங்கள் பத்திரிகையில் இன்னும் பதில் வரவில்லை. மூன்றாவது திறவுகோல் காரர்கள் பற்றி நான் எழுதிமிருந்த கடிதம் சென்ற இதழில் பிரசுரிக்கப் படும் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன்....

'மக்கள் குரல்' வானொலியில் வரும் நாடகத்தில், புலிகளின் தலைவரான புங்கர்த் திருமகனுக்குக் கட்டியங் கூறி வாழ்த்துவது போல ஒரு வரி சொல்லப்படும் 'வாழ்க நீவிர் மட்டும்' என்று. அந்த ஒரு வரியே புலிகளைப் பற்றிய பொருத்தமான விமர்சனமாகவும் இருக்கும். அதுபோல 'சரிநிகர்' பத்திரிகை பற்றிய ஒரு வரி விமர்சனம், அதிகம் தமிழ்ப் பத்திரிகைகள் படிக்காத என் பக்கத்து வீட்டு சினேகிதரிடமிருந்து கிடைத்தது. என் கையிலிருந்து 'சரிநிகர்' பத்திரிகையை வாங்கிப் படித்துவிட்டு, அந்த சினேகிதர் ஆச்சரியத்தோடு கேட்டார், "உங்களுக்கு இந்தப் புலிகளின் பத்திரிகையெல்லாம் எப்படிக் கிடைக்கிறது?"

– நா. திருஞானசுந்தரம்,
வெள்ளவத்தை.

பூமி எனும் விருட்சத்தில் பசுமை இலைகளைக் கொண்டுவரப் பாடுபடுகிறோம். அவர்கள் வேருக்கே அல்லவா விஷம் வைக்கிறார்கள்.

---

இலங்கையின் இனப்பிரச்சினையானது இந்தியாவின் நலன்களோடும் தொடர்புபட்ட விடயமாகும். இலங்கையில் யுத்தம் நிகழும்வரை, அதனால் ஏற்படும் சகலவிதமான புற விளைவுகளும் இந்தியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் இலங்கையிலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல், தென்னாசியாவிலேயே இந்தியாவின் நலன்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. ஆகவே, இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதன் மூலமாக மட்டுமே இலங்கை வாழ் மக்களினதும், இந்தியாவினதும் நலன்களைப் பாதுகாக்க முடியும்.

இதேசமயம், இலங்கையின் இனப்பிரச்சினையை அதன் எல்லைக்குள்ளேயே தீர்த்துக் கொள்வதற்கான அரசியல் வளர்ச்சியோ, பொறிமுறைகளோ, பக்குவமோ இன்று இலங்கையில் செயற்படுவதாக இல்லை என்பது மட்டுமல்லாமல், எதிர்காலத்திலாவது இத்தகைய தீர்வை நோக்கிச் சிந்திக்கக் கூடிய நிலையில் பெரும்பான்மைச் சிங்கள மக்களோ, அவர்கள் மத்தியில் உள்ள அரசியல் தலைவர்களோ தயாராக இருப்பார்களா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

எனவே, இந்தியாவாக இருந்தாலும் சரி, அல்லது வேறு வெளிச்சக்திகளாக இருந்தாலும் சரி, இதன்மீது ஈடுபாடும் நிர்ப்பந்தமும் ஏற்படுத்தாமல், இலங்கைப் பிரச்சினையை ஓர் சுமுகமான தீர்வுக்கான கட்டத்தை நோக்கி நகர்த்திச் செல்ல முடியாத, ஓர் இக்கட்டான சூழ்நிலை இருப்பதனை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதன் காரணமாகவேதான் தமிழ் மக்களின் நலன் கருதியும், ஒட்டுமொத்த இலங்கை மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தைக் கவனத்தில் எடுத்தும், இப்பிரச்சினை தீர்க்கப்படாமல் நீடித்துக் கொண்டு போனால் எதிர்காலத்தில் இப்பிராந்தியத்தின் நலனே கேள்விக்குள்ளாக்கப்படும் என்பதன் அடிப்படையிலும், இலங்கைப்பிரச்சினையில் இந்தியா மேற்கொண்ட ஈடுபாட்டை நாம் ஏற்றுக் கொண்டோம்.

இதன் அடிப்படையில், இலங்கையின் இனப்பிரச்சினையில் இன்னமும் இந்தியாவின் மத்தியத்துவத்தின் அவசியத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

– அரசியல்திட்ட அறிக்கையிலிருந்து ... (05–09 மாசி 1993)

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# "திண்ணைப் பேச்சு வீரரிடம் ஒரு கண்ணாயிருக்கணும் அண்ணாச்சி"



வெறும் திண்ணைப்பேச்சு வீரர்களிடம் மாட்டிக் கொண்டதால் ஆயாசமும் சலிப்பும்தான் மிஞ்சியிருக்கிறது. சரிநிகர் பத்திரிகையில் எழுதுகிறவர்கள், தங்களை வெறும் பத்திரிகையாளர்கள்தான் என்று நிரூபித்துக் கொள்ள முற்படுவதிலேயே பெருமளவு சக்தியைச் செலவழிக்கிறார்கள். இத்தனைக்கும் இவர்கள் யார்? பின்னணி என்ன? என்பதையெல்லாம் பற்றி நாம் இன்னும் சொல்லவில்லை.

கட்சிப் பத்திரிகை ஒன்றில், அந்தக் கட்சியின் கொள்கைகளை விளக்கி எழுதினால், அதையும் ஏதோ குற்றமாய்க் கண்டுபிடித்துவிட்டது போலப் பீத்த வெளிக்கிடும் சிறுபிள்ளைத்தனத்தை என்ன சொல்ல? (இவ்வளவு அரைவேக்காட்டுத்தனமாய் இருப்பவர்கள் உண்மையில் பத்திரிகையாளர்கள்தானா?) சரிநிகரின் ஆஸ்தான கவிஞர்கள் எழுதுவது போல, கட்சிப் பத்திரிகையில் ஆண்குறியையும் பெண்குறியையும் பற்றிக் கவிதை எழுத வேண்டுமென்றா எதிர்பார்க்கிறார்கள்?

இவர்கள் யாருக்காக எழுதுகிறார்கள்? எப்படியெப்படி இந்தக் குழப்ப நோயைத் தொடர்ந்து காவி வருகிறார்கள் என்பதையெல்லாம் மிக விரிவாக இனி நாம் எழுதியாக வேண்டும். எந்த எலும்புத் துண்டுகளுக்கும் எந்த உளவு ஸ்தாபனங்களுக்கும் இவர்கள் ஏஜெண்டுகளாய்த் தொழிற்பட்டு வருகிறார்கள் என்பதையும் சொல்ல வேண்டும். அந்த வண்டவாளங்களையெல்லாம் பின்னொரு சந்தர்ப்பத்தில் தோலுரித்துக் காட்டலாம்.

முதலில், சென்ற இதழ் சரிநிகரில் நமக்குப் பதிலளிப்பதாய் நினைத்துக் கொண்டு, குண்டுச் சட்டிக்குள் குத்துக் கரணமடித்தவரைப் பார்க்கலாம். இத்தனை கடும் முயற்சிக்குப் பிறகு, அந்த நாச...(சே! பெயரை எழுதினால் கூட வெகு பொருத்தமாய்த் திட்டுவது போலாகிவிடப் போகிறது) பிற்போக்கு சக்திகளுக்கெதிராக ஏதோ பெரிய சித்தாந்தப் போர் நடத்துவதான நினைப்பில் கோபத்தை அடக்க மாட்டாமல் குதித்திருக்கிறார்கள். மீண்டும் விஷயமெதுவுமில்லாத – எல்லாவற்றிலும் குற்றம் தேடியலைகிற வெற்றாரவாரம். அதற்கு நாம் என்னத்தைச் சொல்ல?

உயர்ந்தபட்ச கோமாளித்தனமாய் கட்டுரை முடிவாக ஆறு அம்சக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார் திரு. நா... எல்லாமே அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஏற்கனவே சொல்லியிருக்கும் கருத்துக்கள்தான். அதன் தர்க்க ரீதியான முடிவு மட்டும் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்துவதாக சரிநிகர்ப் பாணி வசன அமைப்பில் எழுதப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

அப்பாடா! இந்த 'உண்மையான' பத்திரிகையாளர்கள் ஈழப்போராட்டத்தை உண்மையாகவே ஓரடி முன்னே நகர்த்திவிட்டார்கள். இப்படியே நகர்த்திக் கொண்டு போக வேண்டிய இடத்துக்குப் போய் ஒளிந்து கொள்வார்கள். அடடா! என்னே உறுதியான மக்கள் மீதான அக்கறை!

மக்கள் மீது கொண்ட அக்கறையினால் இவர்கள் சாதித்து முடித்திருப்பதற்கெல்லாம் பெரிய பெரிய பட்டியலே போடலாம். மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்போடு ஈழப்போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது, பாதுகாப்பாய் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டவர்களும், பிறகு அகதிகளுக்காக வெளிநாடுகள் வழங்கியிருந்த சலுகைகளை ஓடியோடி அனுபவித்துக் கொண்டவர்களும், கள்ளத்தனமான நோக்கங்களுக்காக பணத்தைக் கொட்டி உதவுகின்ற வெளிநாடுகளின் பணத்தில் கொழும்பில் பாதுகாப்பான இடத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபா வாடகைக் கட்டிடத்தில் குந்தியிருந்து பத்திரிகை நடாத்துகின்ற சுகபோகத்தில் திளைப்பவர்களும் மக்கள் கஷ்டங்களைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடித்து எழுதுகிறோம் என்கிறார்கள். நாம் என்ன சொல்ல?

அதுமாத்திரமல்லாமல், பின்னோக்கிய பார்வையில் போராட்டத்தைக் கொச்சையாய் எள்ளி நகையாடுவதிலும்

## எலும்புத் துண்டுகளுக்காக எழுதுகிறவர்களுக்கும் சாவுகளின் எண்ணிக்கையைப் பெருக்க சண்டையிட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கும் மத்தியில் தமிழ் மக்களின் அவல நிலைமை

இந்தச் சந்தர்ப்பவாதிகள் பெருமிதம் கொள்கிறார்கள்.

ஏதோ ஒரு வழியாக இவர்கள் அறிவுக்கு தெளிவாக(!) விளங்கிக் கொண்ட ஆறு கருத்துக்களையும் பார்த்தால், அவை எப்போதோ தமிழ்க் கட்சிகள் முன்வைத்து வலியுறுத்தி வருகிற விடயங்களாகத்தானிருக்கிறது. புதிதாக எந்தச் சரக்குமில்லாமலே இந்த உண்மையான(?) பத்திரிகையாளர் அதிமேதாவித்தனப் பம்மாத்துப் பண்ணுகிறார்.

இதுவரை நடந்து முடிந்தவைகள் பற்றி எந்த அறிவுமில்லாமல், ஏதோ சரிநிகர் வெளிவரத் தொடங்கிய பிறகுதான் ஈழப்போராட்டமே ஆரம்பித்ததாக நினைத்துக் கொள்ளும் அரைகுறைத்தனத்தில், புதுக் கண்டுபிடிப்புக்களாய்ப் பழைய விஷயங்களைச் சொல்லிச் சலிப்பூட்டுகிறார்கள். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்பாக ஏதோ மடக்கல் கேள்விகளைக் கேட்பதாய் நினைத்துக் கொண்டு கேட்டிருக்கும் கேள்விகள் எல்லாமே ஏற்கனவே விரிவான விளக்கங்களோடு நாம் பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லிவிட்ட விஷயங்கள் பற்றியதுதான்.

ஈழப்போராட்டத்தின் ஆரம்பகாலத்திலிருந்து, குறைந்தபட்சம் அவதானிப்பையாவது கொண்டிருந்தவர்கள் இப்படியெல்லாம் வேறு கிரகத்திலிருந்து வந்தவர்கள் போலக் கேள்விகள் கேட்டுத் துள்ள மாட்டார்கள். இந்த 'உண்மையான' பத்திரிகையாளர்கள் ஈழப்போராட்டம் குறித்த சில வரலாற்று விபரங்களையாவது தெரிந்து கொள்வதற்கு, ஈழப்போராட்டத்தோடு தொடர்பு கொண்டிருந்த யாரையேனும் கண்டு கதைத்து சில விஷயங்களை அறிந்து கொள்வது நல்லது. எதுவுமே தெரியாமல் பேனை பிடித்து மேதாவித்தனத்தைக் காட்ட வெளிக்கிட்டுத் தங்கள் அரைகுறை ஆத்திரங்களினால் தமிழ் மக்களுக்குத் துரோகமிழைப்பது எந்த விதத்திலும் சரியானதில்லை.

மாகாண சபையை ஏற்றுக் கொண்டது ஏன்? இந்தியாவை நட்பு சக்தி என்று சொல்வது ஏன்? நிரந்தரத் தீர்வு என்ன? தெரிவுக் குழுவுடன் பேசியது ஏன்? போன்ற அறுதல் பழசுக் கேள்விகளுக்கெல்லாம் நாங்கள் ஏற்கனவே சொன்ன விளக்கங்களிலிருந்து, (அதிலுள்ள பிழை எதையாவது கண்டுபிடித்து) புதுசாக எதையேனும் கேட்டிருந்தால் அதில் கொஞ்சமாவது புத்திசாலித்தனமிருக்கும். இவர்கள் என்னவென்றால், "நீங்கள் சொல்லும் விளக்கங்கள் எதையும் கண்டுகொள்ள மாட்டோம். திரும்பத் திரும்ப எங்களுக்குத் தெரிந்த அதே கேள்விகளையே கேட்டுக் கொண்டிருப்போம்" என்று (திருவிளையாடல் நாகேஷ் மாதிரியான) பரிதாபப் பிறவிகளாய்ப் புலம்பிக் கொண்டிருந்தால் நாம் என்னதான் செய்ய முடியும்?

1984 ஜூனில் நடந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முதலாவது காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிறகு, எமது அரசியல் திட்டத்தையும், நிலைப்பாடுகளையும் பிரசுர வடிவங்களில் வெளியிட்டுச் சொல்லியிருக்கிறோம். திம்புப் பேச்சுவார்த்தையின் போது 'யுத்தநிறுத்தமும் பேச்சுவார்த்தையும்' என்ற தலைப்பில் எமது நிலைப்பாட்டை விளக்கியிருக்கிறோம். புலிகள், ஏனைய இயக்கங்களையும் கட்சிகளையும் தடை செய்து அழிக்க முனைந்தபோது பத்திரிகை, வானொலி மற்றும் பிரசுரங்கள் ஊடாக நம் கருத்தைச் சரிவர மக்களிடம் கொண்டுசென்றிருக்கிறோம். புலிகளால் போராட்டம் திசைமாறிச் சீரழிக்கப்பட்ட பிறகு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை எதற்காக ஏற்றுக்கொண்டோம் என்பதை விளக்கிப் பிரசுரங்களும், மாகாண சபைத் தேர்தலின்போது அதற்கான விஞ்ஞாபனமும், மாகாண சபையை ஏற்றுக் கொண்டதற்கான காரணங்களையும் சிறு நூல்கள், அறிக்கைகள், பத்திரிகை வாயிலாக தேவையான விளக்கமெல்லாம் அளித்திருந்தோம். பின்னர் மாகாண சபை கலைக்கப்பட்டபோதும் எமது நிலையை 19 அம்சக் கோரிக்கையாக வெளிப்படுத்தியிருக்கிறோம். ஈழமக்கள் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு ஏன் அவசியமானதும் தவிர்க்க முடியாததாகவும் ஆகியது போன்ற விடயங்களையெல்லாம் எமது பத்திரிகையிலும், 'ஆற்றல்மிகு தோழர்களே', 'இனிய தமிழ் மக்களே' போன்ற பிரசுரங்கள் மற்றும் பத்திரிகை அறிக்கைகள், வெளியீடுகள் வாயிலாகவெல்லாம் சொல்லியிருக்கிறோம்.

பிரச்சினைதீரவேண்டும்என்றஆதங்கத்தோடு நிலைமைகளின் நெருக்குவாரத்தில் சிக்கியிருக்கிற மக்களுக்கு இவையெல்லாம் புரியும். எந்தவிதப் பொறுப்புணர்ச்சியும் இல்லாமல், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றிய அக்கறையுமில்லாமல் அந்தர வெளியில் நின்று நையாண்டி மேளம் வாசித்துக் கொண்டிருக்கும் கையாலாகாக் கனவான்களை, அப்படியே கொட்டி முழக்கட்டும் என்று நாம் விட்டு விடலாம்.

7ம் பக்கம் ☞

## சு ட் ட ப ழ ம்

ஔவைப் பாட்டிக்கு சந்திரனில் இருந்திருந்து போரடிச்சுப் போகவே, ஒரு முறை பூமியைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன என்று ஒரு ஆசை எழுந்து தள்ளாத வயதிலும் அவவை உசுப்பிவிடவே, பொல்லும் கையுமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

மாறிவிட்ட உலகை பூரிப்புடன் பார்த்துப் பார்த்து ஊரெல்லாம் சுத்தித் திரிந்த பாட்டி நல்ல களைப்போடு வந்து சேர்ந்தார் நாவல் மரத்தடிக்கு. நாவல் மரத்தைப் பார்த்த பாட்டிக்கு, முன்னர் முருகப்பெருமான் நடத்திய திருவிளையாடல் ஞாபகத்துக்கு வந்துவிடவே, அந்தக் குறும்பை எண்ணி பொக்கை வாய் மலர்ந்தபடி எங்கே இன்றும் அவன் வந்து ஏதும் விந்தை செய்ய மாட்டானா என்ற ஏக்கத்துடன் மேலே மரக்கிளையை அண்ணாந்து பார்த்தார்.

என்னே அதிசயம்! அங்கே நின்றுகொண்டிருந்தான் ஒரு பால்மணம் மாறாத பையன். அவன் உண்மையில் சென்ரி பார்க்க இயக்கத்தால் நிறுத்தப்பட்டிருந்தவன்.

பாட்டிக்கு ஒரே சந்தோசம். கந்தன் குறும்புகளுக்கு அளவுதான் என்ன? தமிழ் மீது அவனுக்கு இருந்த மோகம்தான் என்ன?

தன்னைப் புதினத்தோடு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பையனை நோக்கி, ஒரு குறும் சிரிப்போடு பாட்டி கேட்டாள், "பையா எனக்குக் கொஞ்சம் நாவல் பழம் பிடுங்கிப் போடப்பா".

அவன் பாட்டியிடம் கேட்டான், "சரி, உனக்கு என்ன பழம் வேணும். சுட்ட பழமா சுடாத பழமா?"

பாட்டி அதே கதையை திரும்பவும் கேட்கின்ற ஆர்வத்தோடு குரல் தளதளக்க, "உனக்குத்தான் தெரியுமே, நான் சுட்ட பழம்தான் கேட்பேன். எங்கே, என் அப்பனே எனக்குச் சுட்ட பழம் தா." கூறிவிட்டு மெய்சிலிர்ப்போடு பாட்டி கண்களை மூடிக் கொண்டாள்.

பையன் மரத்தோடு சாய்த்து வைத்திருந்த ஏ.கே.47 ஐ எடுத்தான். பழங்கள் செறிந்த ஒரு சின்னக் கொப்பாசப் பார்த்துக் குறி வைத்தான். ரிகரை இழுத்தான். படாரென்று வெடித்தது துப்பாக்கி.

வெலவெலத்துப்போன பாட்டி "ஐயோ" என்று குழறியபடியே பொல்லையும் விட்டுட்டுத் தலைதெறிக்க ஓடினாள்.

பழக்குலையோடு கொப்பு முறிந்து விழுந்தது. பழங்கள் சிதறி மண்ணில் உருண்டன. பையன், பயந்து ஓடும் பாட்டியைப் பார்த்து வயிறு குலுங்கச் சிரித்தான். சிரித்தபடியே பாட்டியை நோக்கி உரத்துக் கத்தினான் "இந்தா பாட்டி சுட்ட பழம். வா, இன்னும் நாலைஞ்சு கொப்பு விழுத்திறேன்."

பாட்டியின் காதில் ஒன்றும் விழவில்லை. ஓடிய ஓட்டம், சந்திர மண்டலத்தில் தான் குந்தியிருந்த பழைய இடத்தில் திரும்பவும் போய் விழுந்ததும்தான் நின்றது. பின்னர்தான் பாட்டிக்கு மூச்சு வந்தது. இனி மீண்டும் ஒரு முறை பூமிக்குப் போய்ப் பார்க்கும் ஆசை பாட்டிக்கு இப்போதைக்கு எழப்போவதில்லை. அதற்கு ரொம்பக் காலம் ஆகலாம். அதுவும் நல்லதுக்குத்தான். தமிழ் பிழைத்திருக்கும்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# எமது கட்சியும் மக்களும்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் (05-09 மாசி 1993) நிறைவேற்றிய அரசியல் திட்ட அறிக்கையிலிருந்து...

**5** கட்சியின் ஆரம்பகால வேலைத் திட்டங்கள் ஈழமக்கள் மத்தியில் ஒரு பலமான அடித்தளத்தை ஏற்படுத்தின. மரபுரீதியான நாடாளுமன்றப் பிரமுகர்கள் தலைமையில் தவறான அரசியல் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்பட்ட இடைவெளியை, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் துணிச்சல்கரமான அரசியல் நடவடிக்கைகள் இட்டு நிரப்பின.

பல்வேறுபட்ட மக்கள் இயக்கங்களின் ஊடாக பரந்துபட்ட மக்களின் நேரடி ஈடுபாட்டை போராட்டத்தில் ஈடுபடுத்தும் நோக்கங்களுடன் பல்வேறு முயற்சிகளிலும், அவற்றின் ஊடாக மக்கள் மத்தியில் தெளிவான அரசியல்மயப்படுத்தலை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களிலும் கட்சி தன்னை மிகுந்த அக்கறையுடன் ஈடுபடுத்திக் கொண்டது.

எமது கட்சியானது அரசியல் களத்தில் மட்டுமல்ல, மக்களின் சமூக–பொருளாதார நலன்களிலும் தனது பணியைத் தவறாது நிறைவேற்றியது. ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையாக எமது கட்சி இன்றும் திகழ்வதற்குக் காரணம், அன்று எமது கட்சி தவறாது தொடங்கிய பணிகளே என்பதை நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்துவிடக் கூடாது.

**6** சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகளோடு மிக நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தி, அவர்கள் மத்தியில் ஈழமக்களின் போராட்டம் தொடர்பான சரியான புரிந்துணர்வுகளையும், நம்பிக்கைகளையும் எமது கட்சி வளர்த்தெடுத்தது. வெறும் வாய்மூலமான உறவாக மட்டுமல்லாமல் ஜனநாயக சக்திகளால் முனனெடுக்கப்பட்ட வெவ்வேறு போராட்டங்களின்போதும், சிங்கள மக்கள் மத்தியில் முயற்சிக்கப்பட்ட சமூக, பொருளாதார விடுதலைக்கான போராட்டங்களின்போதும் தனது காத்திரமான பங்களிப்பை தொடர்ந்து வழங்கி வந்திருக்கின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் இருந்து முற்போக்காளர்களாக வெளிவந்தவர்களில் பலர், தொடர்ந்து வந்த பிற்காலங்களில் பிற்போக்காளர்களாகவோ அல்லது சந்தர்ப்பவாதிகளாகவோ மாறிய போதிலும் கூட, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வரலாற்றுக்கடமைகளையும், உறுதியான நிலைப்பாடுகளையும் தொடர்ந்தும் நிறைவேற்றியே வந்துள்ளது.



**7** ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியானது எந்தவொரு சந்தர்ப்பத்திலும், வெவ்வேறு இடங்களில் நிலவும் வெவ்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப முரண்பாடானதும் குழப்பமானதுமான கொள்கை நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் கட்சியாக என்றுமே இருக்கவில்லை. மாறாக, தனது ஆரம்பத்திலிருந்தே நேர்மையாகவும், வெளிப்படையாகவும் எங்கும், எந்த சந்தர்ப்பத்திலும் முரண்பாடுகளின்றியும், ஒரேவகையான திட்டவட்டமான நிலைப்பாடுகளை முன்வைத்துமே உறுதி குலையாது செயற்பட்டு வந்திருக்கிறது. இதனை நாம் பெருமையோடு கூறிக்கொள்ள முடியும்.

**8** எமது கட்சியின் வளர்ச்சியைப் பொறுக்க முடியாத பலர் எம்மைக் கம்யூனிஸ்டுகள் என்றும், சிங்களவர்களுடன் சேர்ந்தவர்கள் என்றும், ஈழம் என்பது முழு ஈழத்தையும் குறிக்கின்றதே தவிர, 'தமிழ் ஈழத்தை' அல்ல எனவும் பல்வேறு விதமாக எமது கட்சிக்கு எதிராக எல்லா வகைப்பட்ட கொச்சைத்தனமான பிரச்சாரங்களையும் கட்டவிழ்த்து விட்டனர். எனினும் அவர்களது பிரச்சாரங்களைக் கண்டு நாம் மனம் சோரவில்லை. மாறாக, உற்சாகமும் தற்றுணிபுமே கொண்டோம்.

ஈழமக்கள் சமூகத்தில் இருந்த பல்வேறு பிற்போக்கு சக்திகளும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஓரம் கட்டிவிடும் நோக்குடன் செயற்பட்டனவாயினும், அவை எல்லாவற்றையும் எதிர்கொண்டு, எமது கட்சி துணிச்சல்கரமானமுறைகளில் முன்னோக்கி நடைபோட்டு வந்திருக்கின்றது.

**9** ஒரு புரட்சிகரமான கட்சிக்கு, புரட்சிகரமானகொள்கைகளும் நிலைப்பாடுகளுமே அடிப்படைகளாகின்றன.ஆனால், அக்கட்சியின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அதன் கொள்கைகள் நிலைப்பாடுகள் மட்டுமே போதியவையாக மாட்டா. ஏனெனில், தவறான கொள்கைகளையும் மோசமான குணாம்சங்களையம் கொண்ட ஒரு கட்சி கூட, தனது விடாப்பிடியான தந்திரங்கள், சுறுசுறுப்பான வேலைத்திட்ட நடைமுறைகளின் ஊடாக மக்கள் மத்தியில் செல்வாக்கையும், மற்றும் ஏனைய பலன்களையும் பெற்றுவிடுவது சாத்தியமாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆரம்பகால வளர்ச்சிக்கும் உறுதியான அத்திவாரத்திற்கும், அதன் புரட்சிகரமான கொள்கைகள் நிலைப்பாடுகளோடு (இவற்றை ஆரம்பத்தில் பெரும்பாலோர் சரிவர அறிந்திருக்க மாட்டார்கள்) அதன் வேலைத் திட்டங்களும்,செயல்முறைகளும், கொள்கைத் திட்டங்கள் வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கடும் உழைப்புக்களுமே காரணங்களாகும்.

**10** 1983க்கு முந்திய காலகட்டத்தில் எமது கட்சியானது மக்கள் இயக்கங்கள், அரசியல்ரீதியான நடவடிக்கைகள் ஆகியவற்றை முன்னெடுப்பதன் ஊடாகவே சிறிது சிறிதாக, படிப்படியாக கட்சி உறுப்பினரின் எண்ணிக்கை அளவை அதிகரித்துக் கொண்டிருந்தது. ஆயுத ரீதியான போராட்டத்துக்குத் தேவையான ஒரு அமைப்பைக் கட்டுவதிலோ, அல்லது அது தொடர்பான குறிப்பான தயாரிப்புக்களை மேற்கொள்வதிலோ பெரிதும் அக்கறையோ அவசரமோ காட்டவில்லை. இது அன்றைய காலகட்டத்தின் நிலைமைகளோடும், தேவைகளோடும் ஒப்பிடும்போது ஒரு வகையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒரு பக்கரீதியான வளர்ச்சிக் குறைபாடாக இருந்தது என்றே கூறுதல் வேண்டும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது அன்றைய காலகட்டத்தில் மக்கள் இயக்கங்களின் வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும், கட்சியின் வளர்ச்சியையும் விரிவாக்கத்தையும் ஒன்றையொன்று மாறி மாறி முன் தள்ளியும் முன் இழுத்தும் இயங்கும் இயல்பான செயல்முறையாகவே கருதிச் செயற்பட்டு வந்திருக்கின்றது. ஸ்தாபன ரீதியான விவகாரங்களில் அரசியற் சித்தாந்த ரீதியான தெளிவும் உறுதியும், உளப்பூர்வமான ஈடுபாடும் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவசியம் என்பதிலேயே அதிக அக்கறை காட்டி வந்திருக்கின்றது.

1983ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக சிறீலங்கா அரசும், சிங்கள இனவெறியர்களும் கட்டவிழ்த்துவிட்ட இனப்படுகொலை நடவடிக்கைகள் ஈழப்போராட்டத்தில் ஒரு திடீர்ப் பாய்ச்சலையும், ஆட்தொகை விரிவாக்கத்தையும் உண்டுபண்ணியது. ஈழ மக்களின் போராட்டத்தில் ஏற்பட்ட இந்த வீக்க ரீதியான பாய்ச்சலின்போது, அதற்கேற்ப ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் தன்னை ஈடுபடுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகவே அமைந்தது.

ஆனால், ஏற்கனவே பல நெருக்கடிகளைச் சமாளித்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்த எமது கட்சிக்கு, இப்புதிய நிலைமைகள் மிக அதிக அளவிலான சுமைகளையும் பொறுப்புக்களையும் திடீரெனச் சுமத்தின. ஆயுதப் போராட்டம் பற்றிய கருத்தைக் கொண்டிருந்த போதிலும், அது தொடர்பாக ஏற்கனவே ஒரு சரியான அமைப்பைக் கட்சி கொண்டிருக்காதபடியினால், 1983ல் ஏற்பட்ட இந்தத் திடீர் விரிவாக்கமானது கட்சிக்குப் பெரும் சிரமங்களை ஏற்படுத்தியது. கட்சியானது தனது முழு சக்திகளையும் இப்புதிய நிலைமைகளைச் சமாளிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது.

தவிர்க்க முடியாத நிலைமைகள் இருந்தபோதிலும் கூட, எமது கட்சியானது திடீர் விரிவாக்கத்தினால் உள்வாங்கப்பட்ட உறுப்பினர்களை அரசியல் சித்தாந்த ரீதியாக வளர்த்தெடுப்பதிலும், தனது அரசியல் ரீதியான நில்லைப்பாடுகளில் உறுதியாக இருப்பதிலும் தவறாது செயற்பட்டு வந்திருக்கிறது.

(வரும்)

---

# உளறு வாயன்



**என் சாதி போலொரு உயர்ந்த சாதி**
**இப் பூதலத்தில் இல்லை**
**என் மதம்போல் மகத்தான ஒரு மதம்**
**இச் சகத்தினில் இல்லை**
**என் மொழிபோல் எழிலான ஒரு மொழி**
**இவ்வூழியில் இல்லை**
**ஆனால்**
**என் சாதியல்லாத சாதியில்**
**என் மதமல்லாத மதத்தில்**
**என் மொழியல்லாத மொழியில்**
**என்னைவிடச் சிறந்தவர்கள்**
**எப்படித்தான் பிறந்தார்கள்**
**என்பதுதான் புரியவில்லை!**

**– ஷண்முக சுப்பையா.**

இந்த நாட்டிலை தேசிய மொழி ரண்டு இருக்கெண்டு சட்டத்திலை எழுதி வைச்சிருக்கினமாம். சிங்களமொண்டு ஆங்கிலமொண்டு, ஓம் ரண்டு மொழி இருக்குத்தானெண்டது ரி.வி. பாக்கிறவைக்குச் சடாரெண்டு விளங்கும். ஞாயிற்றுக் கிழமை நித்திரை வாற பகல் நேரத்திலை கொஞ்சம் தமிழ்ப் பாட்டுப் போட்டுவிடுறதோடை . ரூபவாஹினியின்ரை 'தமிழ்க் கடமை' முடிஞ்சுது. மற்றபடி, ஒவ்வொருநாளும் செய்தியளைத் தமிழிலையும் சொல்லுகினம் தானே எண்டு சந்தோசப்பட வேண்டியதுதான். தமிழிலை உவமானத்தோடை கதை சொல்லுற ஆக்களுக்கு இன்னுமொரு லாபம். கரடி பிறை கண்ட கதைக்குப் பதிலாய் ரூபவாஹினியிலை தமிழ் கண்ட கதையைச் சொல்லலாம்.

இந்தக் கூத்துக்கு நடுவிலை, 'வணக்கம்' 'இலங்கை' எண்டு தமிழிலை சொல்லி வந்த அறிவிப்பையும் சிங்களத்திலை மாத்திச் சொல்லச் சொல்லி ஓடர் வந்ததாம். பாராளுமன்றத்திலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அதைப் பிரச்சினையாக்கின பிறகு மெல்லக் கைவிட்டிட்டினம்.

தங்கடை மொழி பற்றி வடக்கு கிழக்கைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு இருக்கிற உணர்வுபூர்வமான அக்கறை மற்றத் தமிழரைவிட விசேஷமானது எண்டதை இஞ்சை சொல்ல வேணும். அரச கரும மொழி, நிருவாக மொழி எண்டெல்லாம் சொல்லிப் போட்டுப் பேய்க்காட்டல்கள் நடக்கேக்கை, தங்கடை மொழி உரிமைக்காக உடனுக்குடனை குரல் குடுக்கிறது இஸ்லாமியத் தமிழராயிருக்கிறதைப் பாக்கலாம்.

சிங்கள நண்பரொருத்தர் தப்பும் தவறுமாய்த் தமிழ் கதைச்சதைக் கேட்டுட்டு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் நண்பர் இப்பிடித்தான் என்னட்டைச் சொன்னார்: "இந்தக் கொலையைப் பாத்துக்கொண்டு நாங்கள் சும்மா நிக்கிறம். எங்கடை இடத்திலை இப்ப ஒரு முஸ்லிம் நிண்டாரெண்டால், இந்தச் சிங்கள நண்பர் பாடு அதோகதி தான்." இண்டைக்குக் கதை, கவிதை எண்டு தமிழிலக்கியத்தைச் செழுமைப் படுத்துற ஆக்களாயும் பெருமளவுக்கு முஸ்லிம்கள்தான் இருக்கினம்.

7ம் பக்கம் ☞

**உளறுவாயனின் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?**

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# கொஞ்சம் சோகம் கொஞ்சம் சிரிப்பு ஒன்றாகச் சேர்த்து சில கதைகள்





நீண்ட காலத்துக்குப் பிறகு என் பால்ய சினேகிதனைக் கொழும்பில் எனக்கு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு தோற்றத்தில் சந்தித்தேன். கொஞ்சக் காலத்துக்கு முன்வரை சில கவிஞர்கள் எப்பொழுதும் உணர்ச்சிவயப்பட்டதொரு நிலையில் போஸ் கொடுப்பார்களே.... அதுதான் 45 பாகைக் கோணத்தில் தூரத்தே வானத்தைப் பார்த்தபடி இருப்பது.... அதுமாதிரியான ஒரு கோலத்தில் அவனைப் பார்த்தேன்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுக்கு முந்தியே வெளிநாடு போய், இலங்கையுடன் எந்தத் தொடர்புகளும் வைத்துக்கொள்ளாமல் இருந்துவிட்டுச் சமீபத்தில்தான் நாடு திரும்பியிருந்தான். வந்தவனுக்குப் பிறந்த மண்ணைத் தரிசிக்க வேண்டும் என்ற சனி பிடித்து ஆட்டி, அதன் பலனாய் யாழ்ப்பாணத்துக்குப் போயிருந்தான். அதுதான் இந்தப் பரிதாபத்துக்குரிய தோற்றத்துக்குக் காரணம் என்று பின்னால் விளங்கிக் கொண்டேன்.

மாத்தயாவின் விசுவாசப் படை வீரர்கள் பூநகரிச் சண்டையில் முன்னணியில் அனுப்பப்பட்டுப் பலியிடப்பட்டதாகவும், அந்தச் சண்டை நோக்கத்தில் அதுவும் ஒன்று எனச் சனங்கள் பேசிக் கொண்டதாயும் தெரிவித்தான்.

அங்கு பயன்படும் தமிழில் புது மாதிரியான சொற்றொடர்களைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறியதுக்குப் பல பகிடிகளைச் சொன்னான். 'வெளியே பெரிசு வந்திருக்கு' என்பதைக் கேட்டுத் தன் பாட்டனாராக்கும் என்று நினைத்துக் கொண்டு பேசியதையும், மண்டையில் போடுதல், பொட்டு வைத்தல், சாதிச் சோறு தீத்துதல், பள்ளிக்கூடம் துவங்குமுன் கொடிப்

## வெ.வினாயகமூர்த்தி

70களில் அவன் பார்த்த யாழ்ப்பாணம் போல இன்று அங்கு எந்த இடமும் இருக்கவில்லைஎன்பதுடன், அவன் திரிந்து புழங்கிய ஊர் மற்றும் தெருக்களின் பெயர்களும் வேறு வேறு பெயர்களில் மாறிவிட்டிருந்தன. கொஞ்சம் அழகாயும், சிதையாமலும் காணப்பட்டவை ஆங்காங்கேவிஸ்தீரணமானபரப்பளவில் கட்டப்பட்டிருந்த சமாதிகள் தான் என்பது தன்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியதாய்ச் சொன்னான்.

உயிரோடிருக்கும் போராளிகளை விட, இறந்த மாவீரர் குடும்பங்களுக்குத்தான் அதிக மரியாதை தரப்படுவதாகவும், இரண்டு பிள்ளைகளைப் பறிகொடுத்த ஒரு தந்தை மாவீரர் விழாவில் தன் மூன்றாவது சிறுவனையும் புலிகளிடம் ஒப்படைக்கிறேன் என்று சீருடை அணிந்தவர்களின் கைதட்டல்களுக்கு மத்தியில் அறிவித்ததைப் பார்த்ததாயும் சொன்னான். சிறுவர்களுக்கும், வேறு மாதிரியான வாழ்க்கையை விளங்கிக் கொள்ள அங்கு சூழ்நிலை எதுவுமில்லை என்றான்.

பாடல், தலைவர் வணக்கம்... எனத்தான் பேய் முழி முழித்த சந்தர்ப்பங்களையும் விவரித்தான்.

திரும்பி வருவதற்காகப் புலிகளிடம் பாஸ் எடுக்கப் போன இடத்தில், கொழும்பு விலாசத்தில் ஒரு வரியை ஆங்கிலத்தில் சொல்லப் போக, அதனால் பிரயாணம் நாலைந்து நாள் தள்ளிப் போனதையும் சொன்னான்.

நவீன உலகத்துக்குச் சம்பந்தமில்லாமல் கற்கால வாழ்க்கை வாழச் சபிக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத் தமிழனின் இன்றைய அவல நிலையை விளக்க அவன் சொன்ன இந்தக் கதை:

சில காலத்துக்கு முன் ராணுவ வீரர் ஒருவரைக் கொன்றதாகவும், பின்னர் இப்போதைய கஷ்ட நிலைமையில் ஆடு ஒன்றைத் திருடியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட ஒரு நபர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார். உம்மை சிறீலங்கா சட்டப்படி விசாரிப்பதா யாழ்ப்பாணச் சட்டப்படி விசாரிப்பதா என்று அவரிடம் கேட்கப்பட்டது. சிறிது யோசித்துவிட்டு அவர், சிறீலங்கா சட்டப்படியே விசாரியுங்கள் என்றாராம்.

சிறீலங்காச் சட்டப் புத்தகங்களை அலசிப் பார்த்த நீதிபதிகள், யாழ்ப்பாணத்தில் புலிகளைத் தவிர வேறு ஜீவராசிகளைப் பற்றி இந்தச் சட்டப் புத்தகத்தில் எதுவுமில்லை என்பதால், ஆடு திருடியமை குற்றமாய்க் காணப்படவில்லை, நீர் விடுதலையாகிறீர் என்று தீர்ப்பளித்தனர். ஆனால், ராணுவ வீரரைக் கொல்வது தேசவிரோதக் குற்றம். எனவே, அதற்காக உமக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது என்று கூறினராம்.

அந்த நபர் உடனே "மன்னிக்க வேண்டும் ஐயா! யாழ்ப்பாணச் சட்டப்படியே எனக்குத் தீர்ப்பு வழங்குங்கள்" என்று வேண்டினாராம். சரியென்று, யாழ்ப்பாணத்தில் இன்றுள்ள புலிச் சட்டங்களை அலசிய நீதிபதிகள் "ராணுவம் ஒன்றைக் கொன்றதற்காக உமக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட வேண்டும்" என்று தீர்ப்புச் சொன்னார்கள். பிறகு, "ஆனால், யாழ்ப்பாணத்தில் உள்ளவை அனைத்தும் புலிகளின் சொத்துக்கள். எனவே புலிகளுக்குச் சொந்தமான ஆட்டைத் திருடிய குற்றத்திற்காக உமக்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது" என்றனராம்.

இப்படித்தான் தமிழ் மக்கள் கதி இருக்கிறது என்று முடித்தார் நண்பர்.



கடைசியாக, லண்டனிலிருந்து திரு. பெரேரா என்பவர் எழுதி வெளியிட்டிருக்கும் புத்தகத்திலிருந்து ஒரு கதை. 'பிரேமதாசா' என்ற தலைப்பில் திரு.பிரட்மன்வீரக்கோன் எழுதிய புத்தகத்துக்குப் பதிலாக 'பிரேமதாசா: பிரட்மன் வீரக்கோன் சொல்லாதவை' என்ற தலைப்பில், பிரேமதாசா அவர்களின் பல திருக்கூத்துக்களைப் பற்றிச் சொல்லி வெளியாகியிருக்கும் இந்தப் புத்தகம் கடைசியில் இப்படி ஒரு ஜோக்குடன் முடிகிறது.

தனது நம்பிக்கைக்குரிய அந்த மலையாள மந்திரீகரிடம், நீண்ட நாள் உயிர் வாழ்வதற்கான உபாயத்தைச் சொல்லும்படி பணிவுடன் கேட்கிறார் பிரேமதாசா. அவருக்கு **'விஜே'** என்பவரால்தான் ஆபத்து வரப் போகிறது என்று அந்த மந்திரீகர் சொல்கிறார். **'விஜே'** பற்றிய கவலையுடன் வீடு திரும்புகிறார் பிரேமதாசா.

அதன் பிறகு ஒரு நாள் **விஜே**குமாரணதுங்க சுட்டுக் கொல்லப்படுகிறார். மந்திரீகரோ இன்னும் ஆபத்து நீங்கவில்லை என்று மீண்டும் குறி சொல்கிறார். பின்னர் ரோகண **விஜே**வீர கொல்லப்படுகிறார். அதைத் தொடர்ந்து, ரஞ்சன் **விஜே**ரத்ன, **விஜே**விமலசூரிய போன்றோர் படுகொலையாகிறார்கள்.

ஆனால், இதற்கெல்லாம் பிறகு பிரேமதாசாவே கொலை செய்யப்பட்டு விடுகிறார். இப்போது பிரேமதாசாவின் நண்பர்களுக்கு அதிர்ச்சி. அந்த மலையாள மந்திரீகரைத் தேடிப் போகின்றனர். "எல்லா **'விஜே'**க்களை முடித்த பிறகும் பிரேமதாசாவுக்கு மரணம் நேர்ந்தது ஏன்?" என்று கேட்கின்றனர்.

மந்திரீகர், தன் மந்திரச் சடங்குகளை எல்லாம் செய்து குறி பார்த்துவிட்டுச் சொல்கிறார்: "அந்த **'விஜே'** வேறு யாருமல்ல, டி.பி.**விஜே**துங்கா!"

### சதுரங்க வாழ்க்கை

நேராக மட்டுமே போகும்
யானையை மூலையில் போடு
இங்கொன்று அங்கிரண்டாகத்
தாவிடும் இரண்டுங்கெட்டான்
குதிரையை அடுத்தாற்போல் வை
குறுக்கிலே ஒன்றாய் போகுமச
ஒட்டகம் அரசின் பக்கம்
காலாட்கள் சாவார் கொஞ்சம்
அணியிலே முன்னால் நின்று
அரசர்க்கு உள்ளதை விடவும்
அரசிக்கு சக்தி அதிகம்
எனவே-சாமான்யர் செத்தால்கூட
அஃதொன்றும் நஷ்டம் இல்லை
ஆட்டத்தில் ஜெயிக்கணும்னா
ராணியை முன்னே தள்ளு.

- ராஜன்.
(நன்றி: கணையாழி)

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com






இன்று இலங்கையில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் மக்கள் அனைவரும், அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம்களாக இருந்தாலும் சரி, மலையகத் தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் தம்மை அடையாளப்படுத்துவதற்கு ஏதோ ஒரு வகையான அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும். அரசாங்கத்துக்கும் ஆயுதப் படையினருக்கும் அடையாள அட்டை இல்லாத சிறுபான்மை இனத்தவரை மனிதர்களாக ஒப்புக்கொள்ளவே முடியாமலிருக்கிறது.

தேசிய அடையாள அட்டைகள்தான் பொதுவானவையாக இருந்தாலும், மலையக மக்கள் விசேட அடையாள அட்டைகள் வைத்திருக்க வேண்டும் என்று தற்போது ஜனாதிபதி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை வழங்குவதற்கு கண்டியில் காரியாலயமும் திறக்கப்பட்டுள்ளது.

இ.தொ.கா. வின் தலைவர் தொண்டமான் அவர்கள் அரசுடன் மலையக மக்களின் சில அடிப்படையான கோரிக்கைகள் தொடர்பாக முரண்பட்டுக் கொண்டபோது, மாண்புமிகு டிங்கிரி பண்டா விஜயதுங்கா இந்த அறிவித்தலைக் கொடுத்துள்ளார்.

விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும், இது ஒரு சட்டவிரோத நடவடிக்கை என்றும், மலையக மக்கள் இவ் அடையாள அட்டையை பெற வேண்டாம் என்றும் தொண்டமான் அவர்கள் மலையக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த பதினைந்து வருடங்களில் மலையக மக்களின் வாக்குப் பலத்தினால் பதவியிலிருந்து வரும் ஐ.தே.க. ஆட்சியாளர்கள், அடுத்த தேர்தலில் மலையக மக்களின் வாக்குகள் தமக்குச் சாதகமாக இருக்காது என்று கருதி, இந்தக் குழறுபடி வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியாளர்கள் கறுப்பின மக்களுக்கு வழங்கியிருந்த அடையாள அட்டையை ஒத்ததே இவ்விசேட அடையாள அட்டை எனவும், அவர்கள்கூடத் தற்போது இந்த முறையைக் கைவிட்டு விட்டார்கள் என்றும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் சிவசிதம்பரம் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதேபோன்று வேறொரு வடிவத்தில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒட்டி விசேட அடையாள அட்டைகள் வழங்கும் முறை ஒன்றை படையினர் அறிமுகம் செய்ய முயல்கின்றனர். பேரினவாதிகள், தாம் அங்கு ஏற்படுத்தியிருக்கும் திட்டமிட்ட இனவிகிதாசார மாற்றங்களை தமிழர்களினதும், முஸ்லீம்களினதும் வாக்குகள் பாதித்துவிடக் கூடாது என்பதற்காகவே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மொத்தத்தில், எல்லா அடையாள அட்டைகளுமே இங்குள்ள இனச் சிறுபான்மையினராயிருக்கக்கூடிய அனைத்து மக்கள் பிரிவினரும் சந்தேகப் பேர்வழிகள் என்ற முத்திரை குத்துவதாகவே அமைந்துள்ளன. ஆட்சியாளர்கள், இங்குள்ள தமிழ், முஸ்லீம், மலையக மக்கள் தொடர்பாக என்ன நினைக்கிறார்கள் என்பதை, இந்த அடையாள அட்டைக் குழறுபடிகள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

கொழும்பில் தமிழர்கள் என்றால் பொலிஸ் நிலையங்களிலும் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தனைக்கும் மேலாக, ஒரு தமிழர், அவர் ஆணாக இருந்தாலென்ன, பெண்ணாக இருந்தாலென்ன, வயோதிபராக இருந்தாலென்ன, அவர் ஒரு தடவையாவது பொலிஸ் நிலையத்தினுள் இருந்தாக வேண்டும் என்றாகிவிட்டது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கனவே பதிவு செய்து கொண்டவர்களும் திரும்பத்திரும்ப பதிவுசெய்யுமாறு வற்புறுத்தப்படுகிறார்கள்..

இனப்பிரச்சினை நிலவும் பெரும்பாலான நாடுகளில் இந்நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை. காஷ்மீரிலும், பஞ்சாப்பிலும் பிரச்சினை என்பதற்காக டெல்லியில் அவர்கள் அடையாள அட்டைகளுடன் திரிய வேண்டுமென்றில்லை. வட அயர்லாந்தில் பிரச்சினை என்பதற்காக வட அயர்லாந்துக்காரர்கள் லண்டனில் அடையாள அட்டைகளுடன் திரிய வேண்டுமென்றில்லை. அல்லது, பொலிஸ் நிலையங்களில் பதிய வேண்டுமென்றில்லை.

பயங்கரவாதச் செயல்களைப் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதற்கு மாற்று வழிகள் கண்டறியப்பட வேண்டுமேயல்லாமல், சாதாரண மக்களின் சுதந்திரத்தைப் பறிக்க முடியாது.

ஆனால், அடையாள அட்டைகள் வேற்று மனிதர்களுக்கான முத்திரைகள் போல்தான் இங்கு அமைந்துவிட்டன.

இந்நிலையில் விசேட அடையாள அட்டைகளை நிராகரிக்கும்படி தொண்டமான் விடுத்துள்ள கோரிக்கை, அடையாள அட்டை முறைகள் அடியோடு மீள்பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்பதற்கு ஓர் ஆரம்பப் படியாக அமைகிறதெனலாம்.

# திண்ணைப் பேச்சு வீரரிடம்...

இந்தியா பற்றி இவர்களுக்கு அஜீரணக் கோளாறுதான் இருக்கிறது. தமிழ் மக்கள், ஏன் சிங்கள மக்களும்கூட இன்று நிலவும் முட்டாள்தன நிலைமைகளை மாற்ற, இந்தியா வந்து தலையிடாதா என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள். இந்திய அமைதிப்படையை நிலைமை சீரடைவதற்கு முன் திருப்பியனுப்பியது தமிழ் மக்களுக்கும், ஏன் முழு இலங்கைக்குமே எத்தனை பெரிய இழப்பாகி விட்டது என்பதை இப்போது, தமிழ் மக்களைப் பயமுறுத்தலுக்குள் வைத்திருக்க விரும்பும் புலிகளைத் தவிர மற்றெல்லோரும் புரிந்து கொண்டுவிட்டார்கள்.

சரிநிகர்க்காரர்களோ இந்திய எதிர்ப்பு நாடுகளும், அந்த நாடுகளின் ஆதரவில் இயங்கும் நிதி நிறுவனங்களும் போடும் எலும்புத் துண்டுகளுக்கு வாலாட்டிக் கொண்டிருப்பதைத்தான் பெருமையோடு செய்கிறார்கள். இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்திலிருந்து பத்திரிகை வெளியிடும் இந்த 'உண்மைப் பத்திரிகையாளர்கள்' இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமாக என்ன கிழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிராவஸ்திக்குள் இருப்பது பற்றியும் இவர்களிடம் வயிற்றெரிச்சல் தவிர வேறெந்த விளக்கப்பாடுகளுமில்லை. யதார்த்த நிலைமைகளுக்கு இறங்கி வந்து, மக்கள் நலன் பற்றிய அக்கறையிலிருந்து கேள்விகள் கேட்கத் தொடங்கும் வரை நாம் இவர்களது இப்போதைய தத்துப்பித்து உளறல்களையும், கொச்சைப்படுத்தல்களையும் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

கொழும்பில் 22ஆயிரம் ரூபா வாடகை வீட்டில் குடியிருந்து பவிசாகப் பத்திரிகை நடத்தும் இந்த 'உண்மையான' பத்திரிகையாளர்கள், இந்திய எதிர்ப்பு சக்திகள் வழங்கும் பெருமளவு பணத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்கு விசுவாசமாக இந்திய எதிர்ப்பு ஊதுகுழல்களாகச் செயற்படுகிறார்கள். அதன் மூலம் புலிகளைப் போலவே இவர்களும் தங்களுக்கு முடியுமான வகைகளில் தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கும் நாசவேலைக்கு வெகு சிறப்பாகத் துணைபுரிந்து வருகிறார்கள்.

தோழரடிப்பொடியும் வினாயகமூர்த்தியும் சென்ற இரு இதழ்களிலும் எழுதிய கருத்துக்கள் இந்தப் பிழை கண்டுபிடித்துப் பேர் வாங்க அலையும் பண்டிதர்களை நிறையவும்தான் தாக்கிவிட்டிருக்கிறது. எந்தப் பிரயோசனமுமில்லாமல் கோபப்பட்டுக் கொண்டு கன்னா பின்னாவென்று உளறிக் கொட்டியிருக்கிறார்கள்.

உண்மையையும் கழுதை கொடுக்கிற உதையையும் தாங்கிக் கொள்ள ஒருசிலரால்தான் முடியும். கழுதையிடம் உதை வாங்கியிருக்கிறார்களோ இல்லையோ, உண்மையைத் தாங்கிக் கொள்ள மாட்டாமல் தவிக்கிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது. சொந்தமாய் எவ்வித நேர்க் கருத்துக்களுமில்லாமல் எதிர்மறையாய்ப் பிழை கண்டுபிடித்துக் கெக்கலிப்பதன் மூலம் கோபத்தை ஆற்றிக் கொள்ளப் பார்த்திருக்கிறார்கள். தமிழ் மக்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட எல்லா நடவடிக்கைகளையுமே பிழை என்று சாடும் 'ஸினிக்'(cynic)குகளாக, யதார்த்தத்துக்குப் புறம்பானவர்களாக, மக்கள் விரோத நிலைப்பாட்டை வளர்ப்பவர்களாகவே காணப்படுகிறார்கள்.

பாதை தெரியாமல் தூரத்தே திசையை மட்டும் பார்த்துக்கொண்டு பயணம் செய்யப் புறப்பட்டவர்கள் வழியில் எங்கேனும் பற்றைக்குள்ளேயோ பள்ளத் தாக்கினுள்ளேயோ இடறி விழுந்து கிடந்து புலம்பிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியாதுதான். விழுந்து கிடப்பது அந்நிய பண நோட்டுக்களின் மீதென்றால், கீழே கிடந்து கொண்டே பாதையைத் தேடி நடந்து கொண்டிருப்பவர்களைப் பார்த்துப் பரிகாசமும் செய்து கொண்டிருக்கலாம். இத்தகைய வைக்கோற் பட்டறை வாழ் பிராணிகளுக்காக இப்போதைக்கு நாம் அனுதாபப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது.

எதிலாவது குற்றங் கண்டுபிடித்துக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு எந்த ஆக்கபூர்வக் காரியத்தையும் சொல்லவோ செய்யவோ முடியாதவர்களோடு விவாதம் வைத்துக் கொண்டு நாம் என்னத்தைக் காண? இவர்கள், தங்கள் கோபத்தைக் குறைத்துக் கொள்ள உதவியாக இதைச் சொல்லலாம்: உப்பு, மிளகாய், உளுத்தம் பருப்பு போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதைக் குறையுங்கள். வேறென்ன சொல்ல முடியும்?




5ம் பக்கத் தொடர்ச்சி

வடக்கை விட்டுப் புலியளாலை துரத்தப்பட்ட முஸ்லிம் மக்களைப் பற்றித் தமிழர் இயக்கங்களும் கட்சியளும் கவனம் செலுத்தினது காணாதெண்டது தான் என்ரை அபிப்பிராயம். அந்த மக்கள் திரும்பவும் தங்கடை சொந்தப் பிரதேசத்திலை போய் வாழ வேணுமெண்டதுக்காக எல்லாரும் குரல் குடுக்க வேணும்.

கதையோடை கதை இதையும் சொல்ல வேணும். முஸ்லிம்கள், மலையகத் தமிழர் எல்லாரையும் நிராகரிச்சுப் போட்டுப் புலியள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கினம். அதைத் தேசிய விடுதலைப் போராட்டம் எண்டும் சிலர் நியாயப்படுத்திக் கொண்டிருக்கினம். அவையின்ரை நியாயம் எனக்கு விளங்கேல்லை. தமிழ் மக்களின் உரிமையளுக்காக வடக்கு கிழக்கிலை புலியளைத் தவிர வேறையாரும் செயல்படவோ கதைக்கவோ வெளிக்கிடக் கூடாதெண்டு புலியள் தடை செய்திருக்கினம். இயக்கங்களையும் துரத்தி, முஸ்லிம்களையும் துரத்தியாச்சு. இப்ப அங்கை தேசிய யுத்தம் நடக்குதாம். இது என்ன விண்ணாணம் எண்டு ஆராவது விளங்கப்படுத்துங்கோவன்.

இந்தத் தேசிய யுத்தம் எண்ட கதையும் ஒண்டும் புதுசில்லைத்தானே. ஹிட்லரை நியாயப்படுத்தினவையும் சொன்னதுதான். இதைவிட இன்னுமொருபடி மேலை போய்ப் புத்தி சொல்லுற ஆக்கள், 'வடக்கு கிழக்கிலை போய் நிண்டு புலியளையும் எதிர்த்து, ராணுவத்தையும் எதிர்த்துச் சண்டை போட வக்குள்ளவைதான் கெட்டிக்காரர்' எண்டு ஒரு ஒற்றையிலை எழுதித் தலைக்கு வைச்சுக் கொண்டு படுக்கினம். அதுமாதிரி ஒருத்தரும் போராடுகினமில்லை எண்டு திமிர் திமிரெண்டு முழிச்சுக்கொண்டு திட்டுறதாலை என்ன ஆகப் போகுதெண்டு விளங்கேல்லை. சத்தியராஜ் ஒரு படத்திலை சொன்ன மாதிரி மற்றவை ஆரும் என்ன வைச்சுக்கொண்டே வஞ்சகம் செய்யினம்?

அப்பிடியோரு சூழ்நிலை இப்ப இருக்கெண்டால், அந்த மாதிரி ஒரு சக்தி இஞ்சை உருவாகியிருக்கும் அல்லது அதுக்கான ஆரம்பக் கூறுகளை யாவது எங்கையாவது கண்டிருக்கலாம். ஈழப்போராட்டம் திரும்பவும் சரியான முறையிலை ஆரம்பிக்கிறதுக்கும், இப்ப இடைக்காலத் தீர்வொண்டைக் கண்டுகொள்ளுறதுதான் தமிழ் மக்களுக்கு நல்லதெண்டு எனக்குப் படுது. என்னமோ எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன்.

வருசம் பிறந்திட்டுது. 94ம் ஆண்டைத் தேர்தல் ஆண்டாய் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியிருக்கிறார். புலியள் யுத்த ஆண்டாய் பிரகடனப்படுத்தியிருக்கினம். மக்களுக்கு என்னவோ இந்த ஆண்டும் கஷ்ட ஆண்டாய்த்தான் இருக்கப் போகுதுபோலத்தான் தெரியுது.

அடுத்தமுறை பாக்கலாம். பின்னை வரட்டே?

www.padippakam.com

படிப்பகம்



## செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

### "இன்றைய நிலையில் வெளிச்சக்தி ஒன்றின் தலையீடு இன்றி பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது"

? தற்போதைய இலங்கை அரசியல் நிலைமை பற்றி சற்று விரிவாகக் கூறமுடியுமா?

! இலங்கை அரசாங்கம் 1987 ல் ஏற்படுத்தப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை நிராகரித்து, தமிழ் இனப்பிரச்சினைக்கு இன்னோர் தீர்வு காண முயற்சித்தது. இதற்காக பிரேமதாசா அரசாங்கத்தால் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப் பட்டது. ஆனால், பாராளுமன்ற தெரிவுக்குழுவானது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைவிட குறைவான தீர்வை முன்வைக்க முயற்சித்ததால் தமிழ்க் கட்சிகள் இத் தெரிவுக் குழுத் தீர்வை நிராகரித்து, அதிலிருந்து ராஜினாமா செய்துள்ளன. இதைத் தவிர இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு வேறு ஏதேனும் முயற்சி எடுப்பதாகத் தோன்றவில்லை.

இலங்கையின் புதிய ஜனாதிபதி விஜயதுங்கவும்கூட, தமிழர் பிரச்சினை இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சினை என்ற அடிப்படையில் விடயங்களை அணுகுவதால் நிலைமை இன்னும் மோசமாகி வருகின்றது.

அண்மையில் புலிகள் நடத்திய சில தாக்குதல்களானது, சிறீலங்கா ராணுவத்துக்குச் சில இக்கட்டான நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளது. இதனால், இதற்குப் பழிவாங்கும் முகமாக யாழ் குடாநாடு முழுவதும் ஆகாயப் படையினரின் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலுக்குள்ளானது.

மறுபுறத்தில் புலிகளும் பேச்சுவார்த்தையை ஒரு தந்திரமாகவே பாவிக்க முயற்சிக்கின்றார்களேயல்லாமல், பேச்சுவார்த்தைமூலம் ஒரு தீர்வுக்குவர அவர்கள் முயற்சிப்பதாகத் தோன்றவில்லை.

புலிகளின் குறுகிய கண்ணோட்டத்தினாலும், பூகோள அரசியலை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமையினாலும், ஓர் அனாவசிய யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதுடன், அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டும் வருகிறார்கள்.

மொத்தத்தில் இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை முன்வைக்கத் தயாராக இல்லை.

அதேபோல் புலிகளும், ஓர் அராஜகச் சூழல் தமக்குச் சாதகமாக இருக்குமென்று கருதுகின்றார்களேயல்லாமல், ஒரு தீர்வை நோக்கிப் போக அவர்களும் முன்வருவதாக இல்லை. இதுதான் இன்றுள்ள அரசியற் சூழ்நிலையாக உள்ளது.

? இந்தியா தொடர்பாக இலங்கைஅரசுதற்போது என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது?

! இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா ஒரு காத்திரமான பங்களிப்பை கடந்த காலத்தில் நல்கியது. தமிழ் மக்களுக்கு சுயாட்சி கிடைக்க வேண்டுமென இந்தியா வற்புறுத்தி வந்ததையும், தமிழ் மக்களது பிரச்சினைகளை ஓரளவுக்கேனும் தீர்க்கக் கூடிய வகையில் மாகாண அரசு முறையொன்றை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசு இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியதையும் சிங்கள இனவாதிகள் விரும்பவில்லை.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த இத்தீர்வை ஏற்காமல், இவ்வொப்பந்தத்தையே பகிஷ்கரித்தார். பின்னர் ஜனாதிபதியாக வந்ததும், இந்திய அமைதிப் படை நாட்டைவிட்டே போகாது என்ற அடிப்படையில் இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் போராடவும், வடக்கு கிழக்கு மாகாண அரசைச் சீர்குலைக்கவும் புலிகளுக்குப் பெருமளவிலான ஆயுதங்களை பிரேமதாசாவே விநியோகித்தார். அத்துடன், இந்திய ராணுவம் தனது கடமைகளை முடிக்குமுன்னரே இலங்கை மண்ணைவிட்டு வெளியேற வேண்டும் என்று கோஷம் போட்டார்.

இதனால் இந்திய ராணுவமும் முற்றாக வெளியேறியது.

இது புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் தற்காலிக வெற்றிகளை ஈட்டிக் கொடுத்தது. ஆனால், பின்னர் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலானது சிறீலங்காவை இந்தியாவின் பக்கம் தள்ளியது. இதனால் பிரேமதாசா மீண்டும் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்க முயற்சித்தார்.

சிறீலங்காஅரசின்மோசமானஅணுகுமுறைகளும், உதவிகளும் புலிகளை மிகவும் பலப்படுத்த உதவி யது. இன்று அதே புலிகளை ஒழிக்க முடியாமல் சிறீலங்கா அரசு மீண்டும் இந்திய அரசிடம் உதவி கோரும் சூழ்நிலை ஏற்பட்டுவருகின்றது.

பிரேமதாசா அரசாங்கம் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்காமல் இந்திய ராணுவத்தை அனுப்பியது குருட்டுத்தனமான செயலென இன்று சிங்கள மக்கள் கருதுகின்றார்கள். அதேபோல் புலிகளுக்கு ஆதரவாக ஒருகாலத்தில் செயற்பட்ட தமிழ் மக்கள் கூட தமது தவறை உணர்ந்து இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியாதுஎன்று நம்புகின்றார்கள்.

நடைபெறும் யுத்தத்தில் புலிகளும், அரசும் தற்காலிக வெற்றிகளை அடையலாமே தவிர முழுமையான வெற்றியை யாரும் அடையமுடியாது. எனவே, இருபகுதியினரையும் நிர்ப்பந்தித்து ஒரு தீர்வைக் கொண்டுவரக்கூடிய வெளிச்சக்தி ஒன்றின் தலையீடு இல்லாமல் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் கடினமானதாகவே இருக்கும்.

? மீண்டும் இப்பிரச்சினையில் இந்தியா தலையிட்டால், முன்னர் போல் இப்போதும் எதிர்ப்புகள் ஏற்படுமா?

! இந்தியத் தலையீட்டை எதிர்க்கக் கூடியவர்கள் இரு பகுதியினரே. முதலாவது புலிகள், இரண்டாவது சிங்கள இனவெறியர்கள். இவர்களே அன்றும் இந்தியத் தலையீட்டை எதிர்த்தார்கள்.

புலிகளைப் பொறுத்தவரையில் இந்தியத் தலையீடு என்பது தனது ஏகபோகத்துக்கு எதிராக இருக்கும் என்று கருதுகின்றார்கள். புலிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் மாத்திரமே தமிழ் மக்களின் தலைவர்களாக இருக்கத் தகுதி உடையவர்கள். ஏனையவர்கள் எல்லோரும் துரோகிகள். அது அமிர்தலிங்கமாக இருந்தால் என்ன, பத்மநாபாவாக இருந்தால் என்ன, இவர்கள் எல்லோரும் துரோகிகள் சுட்டுக் கொல்லப்பட வேண்டியவர்கள்.

இந்தியா தலையிட்டு, அங்கு ஓர் ஜனநாயகச் சூழல் ஏற்பட்டால் அது புலிகளுக்கு நிச்சயம் சங்கடங்களைஉருவாக்கும். ஆகவே,அவர்களதுஎதேச்சாதிகாரத்திற்கு எதிராக யார் வந்தாலும், அவர்கள் அதனை ஏற்கமாட்டார்கள்.

மற்றையது சிங்கள இனவெறியர்கள். இவர்கள் எப்பொழுதும் இந்தியாவைக் கண்டு நடுங்குபவர்கள். இந்தியா இலங்கையை விழுங்கப்போவதாக கற்பனைக் கதைகளை ஜோடித்தே பிழைப்பு நடத்துபவர்கள்.

இவர்களைத் தவிர, வேறு யாராவது இந்தியத் தலையீட்டை எதிர்ப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. பெரும்பான்மையான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இப்பிரச்சினை தீரவேண்டும், இதற்கு இந்தியாவின் உதவி அவசியம் என்பதை உணர்ந்துள்ளதாகவே நான் கருதுகின்றேன்.

## 1988 நவம்பரில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்ட அறிக்கையிலிருந்து....

கடந்த கால யுத்த சீரழிவுகளினால் எமது மக்களும் தேசமும் அளவிடமுடியாத துன்பங்களுக்கும் இழப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. அனாவசியமான முறையில் இது தொடரக் கூடாது என்பதே எமது விருப்பமாகும்.

யுத்தங்களற்ற ஒரு உலகத்தையே நாம் விரும்புகின்றோம்.

அமைதியான சூழலில், எமது மக்கள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்பதே எமது ஆசையாகும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை முழுமையாகப் பெறப்படாமல், தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட முடியாது என சிலர் வாதிடக் கூடும். அது எமக்கும் புரியும்.

ஆனால், நாம் இன்றைக்குக் கூறுவது என்னவென்றால், சர்வதேச சூழலைப் புரிந்து கொள்ளுங்கள்! அதிலும் குறிப்பாக, தென்னாசிய நாடுகளுக்கிடையேயான உறவுகளையும், அரசியல் உறவையும், அது தொடர்பாக நிலவும் அரசியல் சூழலையும் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்.

இதைப் புரிந்து கொண்டோமானால், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் எவ்வளவு தூரம் நீண்டதும், கடினமானதும் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும்.

"ஒரு நீண்ட கால போராட்டத்தில் போராட்டமும் சமாதானமும் மீண்டும் மீண்டும் தொடரக் கூடியவை. ஒரு காலகட்டத்தில் போராட்டம் முன்னதைவிடக் கூடுதலான சமாதானமான சூழலுக்கு வழிவகுக்கின்றது. அதேபோல், ஒரு காலகட்டத்தில் சமாதானமானது முன்னையதைவிட உக்கிரமான போராட்டத்திற்கு வழிவகுக்கின்றது."

இதை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டு ஒரு போராட்டத்தின் காலகட்டத்தில் அப்போராட்டத்தைச் சரியான பாதையில் மேலும் மேலும் உக்கிரமாக முன்னெடுக்க வேண்டும். அதேபோல, ஒரு சமாதானத்துக்குரிய காலகட்டத்தில், அச்சமாதானத்தை எவ்வளவு தூரம் உயர்ந்த பட்சம் உருவாக்க முடியுமோ, அதனை உருவாக்க அத்தனை முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

போராட்டமும் சமாதானமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை- ஒன்றை ஒன்று உந்தித் தள்ளுகின்றன- ஒன்றுக்காக மற்றொன்று தேவைப்படுகின்றது.

'ஒரு போராட்டத்தை நடத்துகின்ற காலகட்டத்தில், போராளிகள் எவ்வளவு தூரம் முக்கியமான பாத்திரத்தை ஆற்றுகின்றார்களோ, அதைவிடக் கூடுதலான வகையில் சமாதானத்தை உருவாக்குகின்ற காலகட்டத்தில் அவர்களின் முக்கியமான பாத்திரம் சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்றது.

ஈழப் போராட்ட காலகட்டத்தில் தியாகங்களுக்குத் தயங்காது போராடிய ஒவ்வொரு போராளியும், சமாதானம் தேவைப்படுகின்ற இன்றைய காலகட்டத்திலும் மிகவும் அதிகளவு பங்கு ஆற்ற வேண்டும்.

அந்த அடிப்படையில், தமிழ் பேசும் மக்கள்மத்தியிலுள்ளஅனைத்துப்போராளிகளையும் இருகரம் நீட்டி அழைப்பு விடுக்கின்றோம். நாம்அனைவரும் ஒன்றிணைந்து, எமது மக்களுக்கு இன்று தேவைப்படுகின்ற சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், புதிய வாழ்வையும் வழங்குவதற்காகச் செயற்படுவோமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தமென்பது, இந்தியா தனது நலனுக்காகவே கொண்டுவந்தது என்று பலர் கூறுகின்றார்கள்.

எந்தவொரு நாடும், எந்தவொரு மக்கள்கூட்டமும், தத்தம் சொந்த நலன்களை அழித்தொழிப்பதற்காக செயற்படுவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியாது. இந்திய அரசாங்கம், தனது நலனுக்காகவே இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைக் கொண்டுவந்தது என்பதில் நமக்குக் கருத்து மாறுபாடு இல்லை.

ஆனால், இந்திய-இலங்கைசமாதான ஒப்பந்தம் தமிழ் பேசும் மக்களின் சமுதாய நலனுக்கும், சுயநிர்ணய உரிமைக்கான நீண்டகால போராட்ட நலனுக்கும்தவிர்க்கமுடியாதவகையில் தேவைப்படுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும்.

நாம் கண்மூடித்தனமான வீறாப்புகளைப் பேசிக்கொண்டு, யதார்த்தமான சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ளாமல், எம்மைச் சூழவர இயங்கிக் கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலைகளை விளங்கிக் கொள்ளாமல், வரட்டுத்தனமான முறையிலும் குருட்டுத்தனமான வகையிலும் எமது சொந்த இன மக்களுக்கு, நாமே அழிவைத் தேடித் தருவது மிகவும் தவறானதாகும்.

அழிவுகளும் துன்பங்களும் எந்தவொரு நேரத்திலும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டுமென்பதில் நாம் மிகவும் கணிப்போடும் விழிப்போடும் செயற்பட வேண்டும்.

அப்பாவித்தனமான சிறு இளைஞர்களின் கையில் துப்பாக்கிகளைக் கொடுத்து, அரசியல்ரீதியற்ற வகையில் கொலைகள் புரிந்து திரிவதும், சாவுகளைக் கண்டு சந்தோஷப்படுவதும் கோரத்தனமான விடயமாகும்.

எமது மக்களின் வாழ்வில், விடுதலையில் நாம் அக்கறையுள்ளவர்களாக இருந்தால்,

இன்றைக்கு ஒவ்வொரு போராளியும் சமாதானத்தின் தேவையைப் புரிந்து கொள்வான்;

ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டியதன் அடிப்படைவிளக்கத்தைக் கண்டுகொள்வான்;

ஒற்றுமையின் அவசியத்தைச் சொல்லாமலே புரிந்து கொள்வான்.



இப்பத்திரிகை, 32, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்த, கொழும்பு-7 ஐச் சேர்ந்த க. பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. (இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது)

www.padippakam.com